வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- மலர்விழி

தேதி: 24.10.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ரோஜ்கார் மேளா என்னும் வேலை வாய்ப்பு திருவிழாக்கள், இந்திய இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்றும் ஊடகமாகவே மாறி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பீகாரில், சட்டமன்றத் தேர்தலுக்கான, தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரத்தை தொடக்கி உள்ளார்.

புதுச்சேரியில், பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப் பட்டுள்ள தாவரவியல் பூங்காவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில், புதிய காற்றழுதத் தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது.

------------------------------

*மோடி-வேலை வாய்ப்பு 1 (17)*

ரோஜ்கார் மேளா என்னும் வேலை வாய்ப்பு திருவிழாக்கள்,இந்திய இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்றும் ஊடகமாகவே மாறி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று 17ஆவது ரோஜ்கார் மேளாவை, புதுடெல்லியில் இருந்து, வீடியோ செய்தி மூலம் அவர் தொடக்கி வைத்தார். இதுவரையிலான ரோஜ்கார் மேளாக்கள்

மூலம், மொத்தம் 11 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இன்றைய ரோஜ்கார் மேளாவின் போது, பல்வேறு அரசுத் துறைகள், மற்றும், அமைப்புகளுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு, பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. மொத்தம் மூன்றரை கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திலான விக்சித் பாரத் வேலை வாய்ப்புத் திட்டத்தையும், பிரதமர் தொடக்கி வைத்தார்.

முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை நோக்கிய பயணத்தில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்றும் இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதே, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் நோக்கம் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இளைஞர்களுக்கான,

*மோடி-வேலை வாய்ப்பு 2 (13)*

ஸ்கில் இண்டியா போன்ற திட்டங்களே இதற்கு சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேலை வாய்ப்பு சேவைகளுக்கான தேசிய இணைய தளம் மூலமாக, அரசு இதுவரை, 7 கோடிக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புத் தகவல்களை இளைஞர்களுக்கு வழங்கி இருப்பதாக, பிரதமர் தெரிவித்தார். யுபிஎஸ்சி தேர்வுகளில், குறைந்த மதிப்பெண் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை

இழந்தவர்களுக்கு, இதர வேலை வாய்ப்புகளைத் தேடித் தர, பிரதிபா சேது இணைய தளம் தொடக்கப்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவின் மிகப் பெரிய பலம், இளைஞர்கள்தான் என்றும், நாட்டின் வெளியுறவுக் கொள்கை கூட, இளைஞர்களை கருத்தில் கொண்டே வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார். உலக நாடுகள் உடனான இந்தியாவின் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும், இளைஞர்களுக்கான பயிற்சி, மேல் பயிற்சி, மற்றும், வேலை வாய்ப்புகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப் படுவதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

*மோடி-வேலை வாய்ப்பு 3 (5)*

இன்று நாடு முழுவதும் 40 இடங்களில் நடைபெற்ற ரோஜ்கார் மேளாக்களில், மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டு, பணி நியமன கடிதங்களை வழங்கினர். திருச்சியில், மத்திய நிதித் துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, கோவையில், மத்திய எரிசக்தித் துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யசோ நாயக் ஆகியோர், ரோஜ்கார் மேளாவில் கலந்து கொண்டனர்.

-------------------------------

*மோடி பீகார் (8)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பீகார் மாநிலம் சமஷ்டிபூரில், தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு, பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கான, தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரத்தை தொடக்கி உள்ளார். சமஷ்டிபூர் பொதுக் கூட்டத்தில் அவர்

பேசுகையில், ஜனநாயக் கர்ப்பூரி தாக்கூர் காட்டிய வழியில், பீகார் மாநிலத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த தாம் உறுதி ஏற்பதாக கூறினார். பீகார் மாநிலம் பெகுசராய் பகுதியிலும், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

-------------------------------

*ஜிஎஸ்டி- கர்நாடகா* (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 22-ஆம் தேதி அமலாகும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், கர்நாடகத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி- கர்நாடகா* 2 (19)

(வாய்ஸ்)

காஃபி, பால் பொருட்கள், ஆடை வகைகள், கைவினைப் பொருட்கள், கயறு, மற்றும், முக்கிய தொழிலக இடு பொருட்கள் மீதான ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளதால், குறிப்பாக கர்நாடகத்தில், பொருளாதாரம் கணிசமாக ஊக்கம் பெற்றுள்ளது. இத்தகைய பொருட்களின் விலை குறைந்து, தேவை அதிகரிப்பதால், சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்கள், மற்றும், ஏற்றுமதியாளர்களுக்கு, சாதகமான பலன்கள் ஏற்பட்டு வருகின்றன. காஃபி அடிப்படையிலான உற்பத்திப் பொருட்கள், 18 சதவிகித ஜிஎஸ்டி அடுக்கில் இருந்து, 5 சதவிகித

அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளதால், இத்தகைய பொருட்களின் சில்லரை விலை, 12 சதவிகிதம் வரை குறைந்துள்ளது. உயர் வெப்பநிலையில் பதப்படுத்திய பால், மற்றும் பனீர் உள்ளிட்ட பால் பொருட்கள் மீதான வரி, பூஜ்யம் சதவிகிதமாகவும், வெண்ணெய்,மற்றும் நெய் மீதான வரி 5 சதவிகிதமாகவும் குறைக்கப் பட்டுள்ளதால், சில்லரை விலை 7 சதவிகிதம் வரை குறைந்துள்ளது. இதன்மூலம் கர்நாடகத்தில் பால் பண்ணைத் துறை வலுவடைந்து, கிராமப்புற மக்களின் வருவாயும், மகளிர் அதிகாரப் பங்கேற்பும் அதிகரிக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இது அல்லாது கர்நாடகத்தின் புகழ் பெற்ற கைத்தறி, மற்றும் கைவினைப் பொருட்கள் மீதான வரியும் குறைக்கப் பட்டுள்ளதால், இத்துறை சார்ந்த பலரும் பெரும் எண்ணிக்கையில் பயன்பெற உள்ளனர்.

-------------------------------

முர்மு கே□□ா (8)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று கேரள மாநிலம் எர்ணாகுளத்தில், பெண் கல்வி, மற்றும், மகளிர் அதிகாரப் பங்கேற்பில் சிறந்து விளங்கும் புனித தெரேசா கல்லூரியின் நூற்றாண்டு விழாவை தொடக்கி வைத்தார். முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த, பெண்களின் பங்கேற்பு மிக அவசியம் என்று, அவர் தமது உரையில் கூறினார். தேசத்தை கட்டி எழுப்பும் பணிகளிலும், சமூக-பொருளாதார சீர்திருத்தங்களிலும், கேரளப் பெண்கள் நாட்டிற்கே முன் மாதிரியாக திகழ்வதை குடியரசுத் தலைவர் பாராட்டினார்.

-------------------------------

*ங்கசாமி பூங்கா (11)*

புதுச்சேரியில், பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ், 9.89 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப் பட்டுள்ள தாவரவியல் பூங்காவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்தார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, வேளாண் துறை செயலர் திரு. யாசின் சௌத்ரி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். அரிய வகை மரங்கள் அடங்கிய புதுச்சேரி தாவரவியல் பூங்கா, தற்போது விரிவான முறையில் புதுப்பிக்கப் பட்டுள்ளதால், உள்ளூர் மக்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். முதலமைச்சர் பேட்டியில் இருந்து ஒருபகுதி….

(வாய்ஸ்-ரங்கசாமி)

-------------------------------

*ங்கசாமி மானியம்* (12)

புதுச்சேரி மாநிலத்தில் பதிவு பெற்றுள்ள 3 ஆயிரம் கண்ணாடி இழை மீன்பிடி படகுகளில், முதல்கட்டமாக, வீரம்பட்டினம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த, வெளிப்புற இயந்திரம் பொருத்திய 120 ஃபைபர் படகுகளுக்கு டீசல் மானியம் வழங்கும் பணிகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்து, மானியப் புத்தகங்களை வழங்கினார். பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆழ்கடல் மீன்பிடி படகு கட்டிக்

கொள்வதற்கான 60 சதவிகித மானியமாக, புதுச்சேரியைச் சேர்ந்த 5 நபர்களுக்கு, தலா 72 ஆயிரம் ரூபாய் உதவிகளையும் அவர் வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மீன்வளத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், துறை இயக்குநர் திரு. முகமது இஸ்மாயில் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

------------------------------

*ங்கசாமி வகுப்பறை* (13)

புதுச்சேரியில 10 அரசுப் பள்ளிகளில் சிஎஸ்ஆர் நிதி மூலம், ஸ்மார்ட் வகுப்பறைகளை உருவாக்கும் திட்டத்தை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்து, இதுதொடர்பான சான்றிதழ்களை, சம்பந்தப்பட்ட பள்ளிகளில், தலைமை ஆசிரியர்களிடம் வழங்கினார். இத்திட்டத்தின் கீழ், சென்னை இண்டஸ் டவர்ஸ் நிறுவனம், மற்றும், NIIT அறக்கட்டளை மூலம், கல்மண்டபம் தியாகராஜ நாயக்கர் அரசு உயர்நிலைப் பள்ளி, மங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளி, கனுவாப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளி, பனித்திட்டு அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளிட்ட பள்ளிகளில், ஸ்மார்ட் வகுப்பறைக்கு தேவையான கணிப்பொறி மற்றும் இதர டிஜிட்டல் சாதனங்கள் வழங்கப் பட்டுள்ளன. இப்பள்ளிகளைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் டிஜிட்டல் எழுத்தறிவில் மேம்பட இதனால் ஏதுவாகும் என்று, அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------

*வானிலை* (18)

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில், இன்று காற்றழுதத் தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது மேற்கு-வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து, நாளை காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், 26ஆம் தேதி, ஆழந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், 27ஆம் தேதி காலை வாக்கில், தென்மேற்கு, மற்றும், அதனை ஒட்டிய வங்கக் கடல் பகுதிகளில், புயலாகவும் வலுப்பெறக் கூடும் என, எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுரை, மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 30ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவள்ளூர் மாவட்டம் பள்ளப்பட்டில், 15 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

கபடி (6)

பஃக்ரைனில் நடைபெறும் ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகளின் கபடி பிரிவில், இந்திய ஆடவர் அணி, மகளிர் அணி ஆகிய இரண்டும், தங்கப் பதக்கங்களை வென்று, ஆசியாவின் முக்கிய கபடி சக்தியாக இந்தியா திகழ்வதை மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளன. இந்திய மகளிர் கபடி அணியினர், 75க்கு 21 என்னும், பெரிய அளவிலான வித்தியாசத்துடன் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

------------------------------

போலியோ (12)

தேசிய அளவிலான கடும் முயற்சிகள், மற்றும், வலுவான மக்கள் பங்கேற்பு மூலம், போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோயை ஒழிப்பதில், இந்தியாவின் பயணம், மெச்சத்தக்கது என்று, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார். இன்று உலக போலியோ தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், அவர் இவ்வாறு கூறியுள்ளார். வீடு வீடாக சென்று, குழந்தைகள் எவரையும் விட்டு விடாமல் சொட்டு மருந்து புகட்டிய சுகாதார பணியாளர்களின் அர்ப்பணிப்பே, போலியோவை ஒழிப்பதில் இந்தியாவின் வெற்றிக்கு காரணம் என்று அவர் தெரிவித்தார். உரிய நேரத்தில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுத்து, போலியோ இல்லாத, ஆரோக்கியமான எதிர்காலம் ஒன்றை உருவாக்க, அனைவரும்

மறு உறுதி ஏற்க வேண்டும் என்றும், மத்திய அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

-------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ரோஜ்கார் மேளா என்னும் வேலை வாய்ப்பு திருவிழாக்கள், இந்திய இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்றும் ஊடகமாகவே மாறி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பீகாரில், சட்டமன்றத் தேர்தலுக்கான, தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சாரத்தை தொடக்கி உள்ளார்.

புதுச்சேரியில், பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப் பட்டுள்ள தாவரவியல் பூங்காவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில், புதிய காற்றழுதத் தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது.